RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 149 | ஜூன்.4, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மாநிலங்களவை தேர்தல் வேட்புமனு தொடங்கியது: முதல் நாளில் சுயேச்சைகள் இருவர் மனுதாக்கல்



சென்னை: ஜூன்.4-

தமிழகத்தில் மாநிலங்களவையில் காலியாக உள்ள 6 இடங்களுக்கான தேர்தலில், தெலங்கானாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 2 பேர் மனுத்தாக்கல் செய்தனர். மாநிலங்களவைத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் நேற்று தொடங்கியது. ஜூன் 9ம் தேதி வரை மனுத்தாக்கல் செய்யலாம். முதல் நாளில் தேர்தல் நடத்தும் அதிகாரி பா.சுப்பிரமணியம் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி கே.ரமேஷ் ஆகியோரிடம் 2 சுயேச்சைகள் மனுத்தாக்கல் செய்தனர்.

அதில் ஒருவர், அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட மனுத்தாக்கல் செய்யும், சேலம், மேட்டூரைச் சேர்ந்த கு.பத்மராஜன். இது இவர் தாக்கல் செய்யும் 249வது மனுவாகும். அதே போல், தெலங்கானா மாநிலம் ஹைதராபாத், மேட்சல் மகாஜகிரியைச் சேர்ந்த கண்டே சயன்னா என்பவரும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இருவரும் எம்எல்ஏக்கள் முன்மொழிவை வழங்கவில்லை. மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு 34 எம்எல்ஏக்களின் ஆதரவு இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஜூன் 9ம் தேதி மனுத்தாக்கல் செய்ய உள்ளனர்.

## சென்னை பல்கலை. சம்பள பிரச்சினை நிதி சிக்கலுக்கு தீர்வு காண டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: ஜூன்.4-

அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் தேவைப்படக்கூடிய நிதியை உடனடியாக விடுவித்து தொடர்ந்து இயங்கிடத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு தமிழக அரசை வலியுறுத்துகிறேன் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில்: "மே மாதத்திற்கான ஊதியம் தற்போது வரை வழங்கப்படவில்லை எனக்கூறி சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் அப்பல்கலைக்கழகத்தின் வளாகத்திற்குள்ளாகவே கடந்த நான்கு நாட்களாக உள்ளிருப்பு போராட்டம் நடத்தியிருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து இன்று ஊதியம் வழங்க அரசு ஒப்புக் கொண்டிருப்பதாகவும் நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என மாநிலத்தின் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள நிதிச்சிக்கலால் அங்கு பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மாதந் தோறும் ஊதியம் வழங்குவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தென்னிந்திய பல்கலைக்கழகங்களின் தாயாக விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு பல ஆண்டுகளாக துணை வேந்தர் நியமிக்கப் படாமல் இருப்பதும், மாநில அரசு ஒதுக்க வேண்டிய நிதியை முறையாக ஒதுக்காமல் காலம் தாழ்த்துவதாலும் அங்கு உயர்க்கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித்திறனும் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

நீண்ட போராட்டத்திற்கு பின்பு மே மாதத்திற்கான ஊதியம் வழங்குவதாக அரசு உறுதியளித்திருக்கும் நிலையில், ஒவ்வொரு மாதமும் தங்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை தொடர் போராட்டம் நடத்திதான் பெற வேண்டுமா? என சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர்களும் அலுவலர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, சென்னைப் பல்கலைக்கழகம் உட்பட நிதிச் சிக்கலில் தவிக்கும் அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் தேவைப்படக்கூடிய நிதியை உடனடியாக விடுவித்து அப்பல்கலைக்கழகங்கள் எவ்வித சிக்கலுமின்றி தொடர்ந்து இயங்கிடத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு உயர்கல்வித் துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் பரவும் கரோனா: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுக்கு ஓபிஎஸ் வலியுறுத்தல்





சென்னை: ஜூன்.4-

கரோனா தொற்று நோய் தமிழ்நாட்டில் பரவாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முதல்வர் ஸ்டாலின் எடுக்க வேண்டும் என முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த சில ஆண்டுகளாக கரோனா தொற்று நோயை மக்கள் மறந்திருந்த நிலையில், ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கரோனாவின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும், இந்தியாவிலும் இதன் பாதிப்பு கண்டறியப்பட்டு இருப்பதாகவும் தகவல்கள் வருவது பேரதிர்ச்சியை அளிக்கிறது.

நேற்று முன்தினம் மட்டும் இந்தியாவில் 363 பேர் கரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,758 ஆக அதிகரித்து உள்ளதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் 199 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், இந்தியா முழுவதும் நேற்று முன்தினம் ஒரே நாளில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகவும், மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் மே 22ஆம் தேதி 257 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது 3,758 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதாவது, பத்து நாட்களுக்குள் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 14 மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஒமைக்ரான் வைரசின் துணை வகை வைரசால் கரோனா தொற்று வேகமாக பரவுவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ள நிலையில், கேரள மாநிலத்தில் அதிகபட்சமாக 1,400 பேர் கரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு ஒமைக்ரான் ஜே.என்இன் மாறுபாடான எல்.எப்.7 என்ற உருமாற்றம் பெற்ற வைரஸ் பரவி வருவதாக தகவல்கள் வருகின்றன. சளி, தொண்டை வலி, இருமல், மூச்சுத் திணறல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால் முகக் கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தியா முழுவதும் கரோனா தொற்றின் தாக்கம் வேகமெடுத்திருக்கும் நிலையில், அண்டை மாநிலமான கேரளாவில் இதன் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் கரோனாவின் தாக்கத்ததை கட்டுப்படுத்தும் வண்ணம், கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்குள் வருவோர் கரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய சோதனை மேற்கொள்வதும், இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே, குறிப்பாக முதியவர்கள் மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களிடையே ஏற்படுத்தவும், மருத்துவமனைகளில் தேவையான மாத்திரைகளை இருப்பில் வைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது மாநில அரசின் கடமை ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, கரோனா தொற்று நோய் தமிழ்நாட்டில் பரவாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முதல்வர் ஸ்டாலின் எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

## கோமாளி என்று சொல்பவர்கள் ஏமாளி ஆவார்கள்: திமுக தீர்மானம் குறித்து தமிழிசை விமர்சனம்



சென்னை: ஜூன்.4-

எதிர்க்கட்சியினரை கோமாளிகள் என்று சொல்பவர்கள்தான் ஏமாளிகளாக போவார்கள் என தமிழிசை தெரிவித்தார். தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசையின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கோயம்பேட்டில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதனை தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கின் தீர்ப்பு, இனி யாரும் குற்றம் இழைக்கக் கூடாது எனும் வகையில் இருக்கும் என நம்புகிறோம். ஆனால், அரக்கோணத்தில் இருந்து இன்னொரு கூக்குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. தமிழகத்தில் பல இடங்களில் இதுபோன்ற பாலியல் குற்றங்கள் நடந்து கொண்டு இருக்கிறது. இருந்தாலும் அவற்றிற்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை.

பாலியல் குற்றவழக்குகளை உயர் நீதிமன்றம் விரைவுபடுத்தியபோது, ஏதோ தங்களுடைய சாதனைகள்போல முதல்வர் பேசிக்கொண்டிருக்கிறார். அப்படி என்றால் குற்றம் நடந்தது யாருடைய சாதனை. திமுக அரசு எதில் பெருமை கொள்கிறது என்பது புரியவில்லை. தமிழகம் எதை நோக்கிச் செல்கிறது என்று புரியவில்லை. முதல்வர் நிறைவேற்றிய தீர்மானத்தில் கோமாளிகள் என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரை கோமாளிகள் என்று சொல்வது ஆணவத்தின் வெளிப்பாடு. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. கோமாளிகள் என்று சொல்பவர்கள் ஏமாளிகளாக போவார்கள்.

உதயநிதிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் ஒரு தீர்மானமாக நிறைவேற்றியுள்ளனர். இந்தாண்டு மட்டும் தமிழகத்துக்கு ரயில்வேயில் ரூ.8,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.8 லட்சம் கோடி கடனை ஏற்படுத்திய தமிழக அரசு, ரூ.80,000 கோடிக்கு மேல் மக்கள் மீது வட்டியை சுமத்தி இருக்கிறது. இவர்கள் மற்றவர்களை கோமாளிகள் என்கின்றனர். இவ்வாறு கூறினார்.

இதைத்தொடர்ந்து, தேனாம்பேட்டை பகுதியில் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் மாநில துணை தலைவர் கரு.நாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



■ பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் நாமக்கல் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 726 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்கள். உடன் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.

## உள்ளாட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல்



சென்னை: ஜூன்.4-

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் இரண்டு சட்ட மசோதாக்களுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்கியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஏப்ரல் மாதம் உள்ளாட்சிகளில் மாற்றுத் திறனாளிகளை நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன உறுப்பினர்களாக நியமிப்பதற்கான சட்டத் திருத்த மசோதாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். தற்போது அந்த 2 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

மசோதாவின் அம்சங்கள் "தமிழகத்தில் இருக்கும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், அதாவது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக ஆக்கப்படுகிறார்கள்.

இதன் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளில், மாற்றுத் திறனாளிகளுடைய பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு, அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளையும், சிறப்புரிமைகளையும் சமமாகப் பெறுவதற்கு இந்தச் சட்ட முன்வடிவுகள் வழிவகுக்கும். இது, 'எல்லோருக்கும் எல்லாம்' என்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்துகிற சமூக நீதியை அடைவதற்கான மற்றுமொரு முன்னெடுப்பாகும்.

இதனை நடைமுறைப்படுத்த, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, தமிழ்நாடு நகர்ப்புர ஊராட்சிகள் சட்டம் 1998 ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மசோதாக்கள் மூலம், மாற்றுத் திறனாளிகள் குரல், உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை வழிநடத்துகிற வல்லமை பெற்றவர்களாகத் திகழ்வார்கள்'' என பேரவையில் இந்த மசோதாக்களை தாக்கல் செய்த போது முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதன் மூலமாக 650 மாற்றுத் திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், 12,913 மாற்றுத் திறனாளிகள் கிராமப் பஞ்சாயத்துக்களிலும், 388 மாற்றுத் திறனாளிகள் ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளில் 37 மாற்றுத் திறனாளிகளும் நியமிக்கப்படுவர். தற்போது இதற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

நிலுவை மசோதாக்கள்: முன்னதாக, துறைகளுக்கான நிதி ஒதுக்கம், மானிய கோரிக்கைகள் உட்பட நிதி தொடர்பான 4 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மே மாதம் ஒப்புதல் அளித்திருந்தார்.

கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகம் உருவாக்குவது, நிதி நிறுவனங்களின் வலுக்கட்டாய கடன் வசூல் நடவடிக்கைகளில் இருந்து மக்களை பாதுகாப்பது, தமிழ்நாடு கல்வியியல், விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிப்பது நீக்குவதற்கான அதிகாரத்தை அரசுக்கு வழங்குவது, மின்தூக்கிகள், நகரும் மின் படிக்கட்டுகளுக்கு ஆன்லைனில் உரிமம் வழங்குவது, அறிவியல் சார் நில வரைபட அடிப்படையில் தீயணைப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பான தீயணைப்பு சட்ட திருத்த மசோதா, அனுமதியின்றி உயிரி மருத்துவ கழிவுகளை கொட்டுவோரை தண்டிக்கும் சட்ட மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் தற்போது ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பதில் கூறாமல் பிரச்சினையை மூடி மறைக்க முயல்கிறது தெற்கு ரயில்வே

## சு.வெங்கடேசன் எம்.பி. குற்றச்சாட்டு



சென்னை: ஜூன்.4-

தமிழகத்தில் முடக்கப்பட்ட ரயில்வே திட்டங்கள் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு பதில் கூறாமல் , தெற்கு ரயில்வே பிரச்சினையை மூடி மறைக்கவே முயல்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் ரயில் வளர்ச்சி திட்டங்கள் முடக்கப்பட்டது குறித்து, தெற்கு ரயில்வேயின் பொதுமேலாளர், ரயில்வே வாரியத்துக்கு எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையில் சில கேள்விகளை எழுப்பி அறிக்கை வெளி யிட்டிருந்தேன். அதற்கு தெற்கு ரயில்வே விளக்கம் அளித்துள்ளது. அந்த விளக்கம் திட்டங்கள் குறித்த பொதுவான கொள்கையாகும். நான் எழுப்பியது பொதுமேலாளருடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்ட விபரங்கள் சார்ந்தது.

முடக்கப்பட்ட புதிய பாதை ரயில் திட்டங்கள், நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டு இப்பொழுது மீண்டும் சர்வேக்கு மாற்றப்பட்டுள்ள மூன்று இரட்டை பாதை திட்டங்கள் குறித்த விபரங்கள் ஆகும். தெற்கு ரயில்வேயின் பொதுமேலாளர், ரயில்வே வாரியத்துக்கு எழுதிய கடிதத்தில் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் குறித்து நான் கேள்வி எழுப்பி இருந்தேன். ஆனால், தெற்கு ரயில்வே அதற்கு பதில் சொல்லாமல் திட்டங்கள் குறித்த பொதுவான கொள்கைகளை அறி வித்துள்ளது.

"நீங்கள் கூறியது தவறு. திட்டங்கள் முடக்கப்படவில்லை" என்று பதில் கூறியிருந்தால் நான் வரவேற்று இருப்பேன். ஆனால், அதைப் பற்றி எதுவும் கூறாமல், பொதுவான திட்டங்கள் குறித்த கொள்கையை அறி வித்ததன் மூலம் தெற்கு ரயில்வே நிர்வாகம், பிரச்சினையை மூடி மறைக்கவே முயல்கிறது.

தமிழகத்தில் புதிய அகல ரயில் பாதை பணிகளின் மொத்த நீளமான 864.5 கி.மீ.ல் 571.33 கி.மீ (66%) புதிய ரயில் பாதை திட்டங்களின் நிதி முதல் காலாண்டிலேயே திருப்பி அளிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது. சென்னை கடலூர் மற்றும் ஈரோடு பழனி ஆகிய ரயில் பாதை திட்டங்கள் நிறுத்தப்படலாம் என தெற்கு ரயில்வே பொது மேலாளர் கடிதம் எழுதியுள்ள நிலையில், இது குறித்து ரயில்வே அமைச்சர் விளக்குவாரா? தமிழகத்தின் 47.8 சதவீதம் புதிய அகல ரயில் பாதை திட்டங்கள் முடக்கப்படுவது உண்மைதானா என்பதை அமைச்சர் தெளிவு படுத்துவாரா?

இந்த கேள்விகள் தமிழகத்தின் அடிப்படை வளர்ச்சியோடு சம்மந்தப்பட்டது. எனவே, மத்திய அரசின் துரோக நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிறை காவலர் பணியிட மாற்ற உத்தரவை திரும்பபெற வேண்டும்: சீமான் வலியுறுத்தல்



சென்னை: ஜூன்.4-


சிறைத்துறை முதல்நிலை காவலர்கள் பணியிட மாற்ற உத்தரவை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம் முழுவதும் பல்வேறு சிறைகளில் பணிபுரிந்து வந்த 150 முதல்நிலை சிறைத்துறை காவலர்களை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திமுக அரசு பணியிட மாற்றம் செய்ய உத்தரவிட்டுள்ளது. பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட உள்ளதால், சிறைத்துறை காவலர்கள் பணிபுரியும் பகுதிக்கு அருகே தங்களது பிள்ளைகளை சேர்த்து கட்டணம் செலுத்திவிட்ட நிலையில், திடீரென காவலர்களை இடமாற்றம் செய்திருப்பது கண்டனத்துக்குரியது.

பொது கலந்தாய்வு ஏதுமில்லாத இந்த இடமாற்ற உத்தரவு மூலம், காவலர்களை மட்டுமின்றி, அவர்களது குடும்பத்தையும் திமுக அரசு தண்டித்துள்ளது. இடமாற்றம் செய்யப்படும் முன்பு ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வை வழங்கி, காலிப்பணியிடங்களை கணக்கிட்டு, கலந்தாய்வு நடத்தி காவலர்களின் விருப்பங்களை கேட்டறிந்து இடமாற்றம் செய்யப்பட வேண்டும். இதுவே நடைமுறை.

அவற்றில் எதையும் பின்பற்றாமல், காவலர்கள் பொது கலந்தாய்வு மூலம் தங்களுக்கு விருப்பமான இடங்களை கண்டறியும் வாய்ப்பை தட்டிப்பறித்திருப்பது கொடுமையாகும். இதனால் காவலர்கள் பொருளாதார நெருக்கடியையும், குடும்பத்தை பிரிகின்ற மனஉளைச்சலையும் அடைவார்கள் என்பது அரசுக்கு தெரியாதா? எனவே பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படும் சூழலை கருத்தில்கொண்டு சிறைத்துறை காவலர்களுக்கான பணியிட மாற்ற உத்தரவை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வேதாரண்யத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வரும் இடம் கல்வி நிறுவனத்துக்குச் சொந்தமானது



சென்னை: ஜூன்.4-

வேதாரண்யத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வரும் இடம் கஸ்தூரிபா கன்யா குருகுல கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமானது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வேதாரண்யம் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்துக்கு சொந்தமான இடத்தில் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டதாக அக்கல்வி நிறுவனம் சார்பில் அதன் நிர்வாக அறங்காவலர் சொக்கலிங்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்ற தனி நீதிபதி உத்தரவிட்டார். தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து சொக்கலிங்கம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.

இந்த மேல்முறையீடு வழக்கு நேற்று (ஜூன் 3) நீதிபதி அனிதா சுமந்த் , குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், "பேருந்து நிலையம் கட்டப்படும் நிலம் கல்வி நிறுவனத்துக்கு சொந்தமானது. பொது மக்களின் பயன்பாட்டுக்காக பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதால், 2013 நில எடுப்பு சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

அதே வேளையில், நிலத்தை அரசு அதிகாரிகள் கையகப்படுத்துவதற்கு முன்பு, தகுந்த நஷ்டஈடு தொகையை கல்வி நிறுவனத்துக்கு வழங்கிய பின்னர் பேருந்து நிலைய கட்டுமானப் பணியை தொடரலாம்" என நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர். 2013 நில எடுப்பு சட்டப்படி அரசு, கல்வி நிறுவனத்துக்கு மூன்று மடங்கு நஷ்டஈடு தொகையை வழங்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# சிக்கிம் மாநிலத்தில் கனமழை: ராணுவ முகாம் அருகில் நிலச்சரிவு 3 வீரர்கள் உயிரிழப்பு, 6 பேரை காணவில்லை



காங்டாக்: ஜூன்.4-

சிக்கிம் மாநிலத்தில் ராணுவ முகாம் அருகில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் 6 வீரர்களை காணவில்லை.

சிக்கிம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் டீஸ்டா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏராளமான கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கனமழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும் பாலங்களும் சேதம் அடைந்துள்ளன. இதனால் போக்குவரத்து முடங்கியுள்ளது. உள்ளூர் மக்கள் மட்டுமின்றி லாசென், லாசுங் உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலா சென்ற ஆயிரக்கணக்கான மக்களும் ஆங்காங்கே தவித்து வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு சிக்கிம் சாட்டன் எனும் பகுதியில் உள்ள ராணுவ முகாம் அருகில் நேற்று முன்தினம் மாலை நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 3 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் 6 வீரர்களை காணவில்லை.

இதுகுறித்து ராணுவ அதிகாரிகள் கூறுகையில், "இதுவரை நிலச்சரிவில் சிக்கிய 3 வீரர்களின் உடல் மீட்கப்பட்டுள்ளது. மேலும் 4 வீரர்கள் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டனர். காணாமல்போன 6 வீரர்களை மீட்கும் பணி தொடர்கிறது. சவாலான வானிலைக்கு மத்தியில் இப்பணியில் மீட்புக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன" என்று தெரி வித்தனர்.

நிலச்சரிவில் இறந்த வீரர்கள், ஹவில்தார் லக்விந்தர் சிங், லான்ஸ் நாயக் முனிஷ் தாக்குர், போர்ட்டர் அபிஷேக் லகடா என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களின் குடும்பத்தினருக்கு இந்திய ராணுவம் ஆழந்த இரங்கல் தெரி வித்துள்ளது. அசாம் மாநிலத்திலும் கனமழை பெய்து வருகிறது. இங்கு 15 மாவட்டங்களை சேர்ந்த 78 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 2 சிறுவர்களை காப்பாற்றி நீரில் மூழ்கி உயிரிழந்த

# தொழிலாளி குடும்பத்துக்கு அரசு ரூ.10 லட்சம் நிதியுதவி

சென்னை: ஜூன்.4-

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை தாமிரபரணி ஆறு தடுப்பணையில் தவறி விழுந்த இருவரை காப்பாற்றி நீரில் மூழ்கி உயிரிழந்த பீட்டர் ஜான்சனின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் நிதியுதவி வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை கிராமத்தைச் சேர்ந்த பீட்டர் ஜான்சன் என்பவர் குழித்துறை தடுப்பணை மேல்பகுதியில் வாவுபலி திடல் அருகில் குளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டில் நின்று குளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.




இவர் 01.06.2025 அன்று சுமார் காலை 11.30 மணியளவில் மேற்படி பகுதியில் குளிக்கச் சென்றபோது தடுப்பணையில் வெட்டுமணி பகுதியிலிருந்து குழித்துறை, மதிலகம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த மனோ (வயது 17) மற்றும் சிறுவன் அகிலேஸ் (வயது 12) ஆகியஇருவரும் நடந்து வந்து கொண்டிருக்கும்போது தவறி தடுப்பணையின் கீழ்ப்பகுதியில் விழுந்ததைக் கண்ட பீட்டர் ஜான்சன் இந்த நபர்களை காப்பாற்ற தடுப்பணையின் கீழ்ப்பகுதியில் இறங்கி இரண்டு இளைஞர்களையும் காப்பாற்றி கரை ஏற்றிவிட்ட நிலையில் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் இரண்டு இளைஞர்களை காப்பாற்றி தன் உயிரைத் தியாகம் செய்துள்ள பீட்டர் ஜான்சனின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினர் நண்பர்கள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

பீட்டர் ஜான்சனின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் துணிச்சல் மற்றும் தியாக உணர்வைப் போற்றும் வகையில் அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அங்கன்வாடியில் தினமும் முட்டை, சிறுதானிய சுண்டல்: முதல்வர் ரங்கசாமி ஒப்புதல்

புதுச்சேரி: ஜூன்.4-

அங்கன்வாடியில் தினமும் முட்டை, சிறுதானிய சுண்டல், மாதம் இரு முறை சத்துமாவு தர முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊதியமும் உயர்கிறது. மொத்தம் ரூ. 12 கோடி நலத்திட்டங்களுக்கு முதல்வர் ரங்கசாமி ஒப்புதல் தந்துள்ளார்.

புதுவை மாநிலத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல திட்ட வழிகாட்டுதல் குழு கூட்டம் முதல்வர் ரங்கசாமி தலைமையில் நடந்தது. அமைச்சர் தேனீ ஜெயகுமார், ஆட்சியர் குலோத்துங்கன், சார்புச் செயலர் (நிதி) ரத்னகோஷ் கிஷோர் சவுரே, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இயக்குநர் முத்துமீனா, குழு அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் விவரம்: மத்திய அமைச்சகத்தின் வழிக்காட்டுதலின்படி 6 மாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு , தினமும் முட்டை மற்றும் சிறுதானிய சுண்டல், மாதம் இருமுறை சத்துமாவு வழங்குவது.. நகர்புற அங்கன்வாடி மையங்களுக்கு தற்போது வழங்கப்படும் வாடகை கட்டணம் ரூ.3 ஆயிரத்து 250ல் இருந்து ரூ.6 ஆயிரமாகவும், கிராமப்புறங்களுக்கு ரூ.ஆயிரத்து 750ல் இருந்து ரூ.2 ஆயிரமாகவும் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் கேஸ் இணைப்பு மற்றும் அடுப்பு வழங்குவது. அங்கன்வாடி குழந்தைகளுக்கு வாரம் ஒருமுறை சிறுதானிய பிஸ்கட் மற்றும் பருவகால பழங்கள் வழங்குவது. கவுரவ அங்கன்வாடி ஊழியர்களுக்கான ஊதியம் ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ.12 ஆயிரமாகவும், உதவியாளர்களுக்கு ரூ.4 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாகவும், உயர்த்தி வழங்குவது.

அங்கன்வாடி பயிற்சியாளர்களுக்கு கவுரவ ஊதியம் ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும் உயர்த்துவது, காய்கறி மற்றும் எரிவாயு தொகை உயர்த்தி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தைகள் நல திட்டத்திற்கு தற்போது ஆண்டுக்கு ரூ.18 கோடியை மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை வாயிலாக அரசு செலவிட்டு வருகின்றது. இந்த அறி விப்புகளால் கூடுதலாக ரூ. 12 கோடி செலவாகும்.





# நூல் வெளியீட்டு விழாவில் சிவகங்கை எழுத்தாளர்களுக்கு விருது



கோவை, ஜூன். 04

மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ் பண்பாட்டு மரபுச் செல்வங்கள் நடுவம், கொடுமுடி உதய நிலவு கலைக்கூடம், ஈரோடு செந்தமிழ் முற்றம், அமெரிக்கா குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை, சென்னை பரம்பரை பொக்கிஷம் மலர் மருத்துவம் இணைந்து ஒன்பதாம் ஆண்டு ஐம்பெரும் விழாவை ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் உள்ள ராம் மஹாலில் நடத்தியது. அவ்விழாவில் சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் மகா பிரபு எழுதிய 12 சிறுகதைகள் அடங்கிய யாரடி நீ மோகினி சிறுகதை நூல் வெளியீடு நடைபெற்றது. இது அவரின் ஒன்பதாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது. நூலை ஈரோடு காவல்துறை கண்காணிப்பாளர் சண்முகம், கோயம்புத்தூர் இசை மற்றும் யோகா ஆசிரியர் நளினாம்பிகா இணைந்து வெளி யிட சேலம் நெடுஞ்சாலை மற்றும் பராமரிப்புத் துறை உதவி கோட்டப் பொறியாளர் மூர்த்தி மற்றும் கவிஞர் உதய நிலவு இணைந்து பெற்றுக் கொண்டனர். இந்நூல் வெளியீட்டு விழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ் பண்பாட்டு மரபுச் செல்வங்கள் நடுவத் துறையைச் சேர்ந்த முனைவர் சத்தியமூர்த்தி, திருப்பூர் மாவட்ட பொங்கலூர் வட்டாரக் கல்வி அலுவலர் சின்னக்கண்ணு , சிவகங்கை மாவட்ட கவிஞர் தமிழ்க்கனல், நாவலர் அன்பு பொற்செல்வி, செந்தமிழ் முற்றத்தைச் சேர்ந்த தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் இலக்கியப் பணியை சிறப்பாக செய்து ,தொடர்ந்து தங்களது நூல்களை வெளியிட்டு வரும் சிவகங்கை மாவட்ட எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களான தமிழ்க்கனலுக்கு திருக்குறள் தூதர் விருதும், எழுத்தாளர் மகா பிரபுவுக்கு கலைத்திறன் விருதும் வழங்கி கௌரிக்கப்பட்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சானிட்டோரியத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் செ.சுரேஷ் அவர்கள் ஏற்பாட்டில் சித்தா மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ கலந்து கொண்டு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், எஸ்.ஜி.கருணாகரன் வட்ட செயலாளர் எம்.வினோத், மா.கன்னியப்பன், எம்.சூர்யா, மாறன், இ.நவீன், என்.மதன், எஸ்.ரமேஷ், புருஷோத், உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# இலங்கையில் நடைபெற்ற யோகாசன போட்டியில் பழனி பி ஆர் ஜி பள்ளி மாணவ மாணவி சாதனை

திண்டுக்கல், ஜூன்.4

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள பி ஆர் ஜி தனியார் பள்ளியில் பயிலும் மாணவி மேகவர்ணிகா மற்றும் மாணவன் நகுலன் ஆகியோர் இலங்கையில் உள்ள திரிகோணமலையில் உலக அளவிலான ஐ யூ ஒய் எஃப் யோகா பெடரேசன் சார்பில் நடைபெற்ற யோகாசன போட்டியில் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் பலதரப்பட்ட நாடுகளில் இருந்து சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் பலதரப்பட்ட சுற்றுகளில் பல வகையான ஆசனங்கள் மாணவ மாணவிகளால் காட்சிப்படுத்தப்பட்டது.

இதில் பழனியைச் சேர்ந்த பி ஆர் ஜி மாணவ ,மாணவிகள் கப்போட்டாசனம், சிரசாசனம், பச்சிமோத்தாசனம் போன்ற பல ஆசனங்களை காட்சிப் படுத்தி மாணவர் பிரிவில் நகுலன் முதலாம் பரிசான தங்க பரிசையும், மாணவி பிரிவில் முதலாம் பரிசான தங்க பரிசையும் தட்டிச் சென்றனர். தொடர்ந்து இந்த போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியை பள்ளி சார்பிலும் , யோகாசன ஆசிரியர் பிரகாஷ் , பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.



# மாநகராட்சி மேயர் தலைமையில் முன்னாள் கழக தலைவர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

தாம்பரம், ஜூன்.4

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி அருகில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 102 வது பிறந்தநாள் முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ கலந்து கொண்டு தலைவர் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி வணங்கி இனிப்புகள் வழங்கினார். உடன் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, செ.சுரேஷ், ரமணி ஆதிமூலம், பகுதி கழக நிர்வாகிகள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், ஆர்.அகஸ்டின், டி.கே. தாமஸ், ஆர்.செல்வகுமார், இரா.ரத்திணகுமார், இரா. விஜயகுமார், கி.மாறன், சீனிவாசகுமார், பேகம், புவனேஸ்வரி, க.முனுசாமி, எஸ்.வி.தனசேகர், தங்கராஜ், சித்திரம்வாசு, எம்.ரவிகுமார், எம்.ரமேஷ், எஸ்.ரமேஷ், பட்டுராஜன், கணபதி, மா.கன்னியப்பன், பி.காளியப்பன், எம்.சூர்யா, எம்.மதன்குமார், இ.நவீன் உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாடானையில் கட்டுப்பட்டை இழந்த லாரி வேப்பமரத்தில் மோதி விபத்து : லாரிக்குள் டிரைவர் சிக்கி 2 மணி நேரத்திற்கு மேலாக போராடி மீட்டனர்

திருவாடானை, ஜூன்.04

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே கொச்சி தொண்டி தேசிய நெடுஞ்சாலையில் பாரதிநகர் பகுதியில் கேரளாவில் மீன் லோடு இறக்கிவிட்டு நாகப்பட்டினத்திற்கு திரும்பி வரும் போது ஈச்சர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரத்தில் இருந்த வேப்ப மரத்தில் மோதி விபத்திற்குள்ளானது. இதில் நாகப்பட்டினத்தை சேர்ந்த ஜெயபால் மகன்



சிவானந்தம் (45) ஓட்டுநர் சிக்கி கொண்டார். உடன் அருகில் இருந்தவர்கள் திருவாடானை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். நிலைய அலுவலர் முருகானந்தம் (போக்குவரத்து) பொறுப்பு தலைமையிலான வீரர்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக போராடி டிரைவரை பத்திரமாக மீட்டனர் அவருக்கு காலில் பலத்த காயங்கள் ஏற்பட்டதோடு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்து அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.விபத்து குறித்து திருவாடனை காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# “ஸ்டாலின் நிறைவேற்றும் திட்டங்களில் கருணாநிதி வாழ்ந்து கொண்டிருக்கிறார்” அமைச்சர் தங்கம் தென்னரசு

சிவகாசி: ஜூன்.4-

“தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றும் ஒவ்வொரு திட்டத்திலும் கருணாநிதி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்,” என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

சிவகாசி அருகே திருத்தங்கல்லில் உள்ள தனியார் மண்டபத்தில் மறைந்த முதல்வர் கருணாநிதியின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், சலவை தொழிலாளிகளுக்கு இஸ்திரி பெட்டி, தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை மற்றும் அரிசி, அறுசுவை உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை



வழங்கினார்.

அப்போது அவர் பேசியது: “முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி கருணாநிதியின் 102 வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் தமிழகம் முழுவதும் 102 இடங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று நடைபெற்று வருகிறது. நவீன தமிழகத்தின் சிற்பியான கருணாநிதி கொண்ட கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழியில் முன்நோக்கி கொண்டு செல்ல நாம் பயணித்து வருகிறோம். தமிழகத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலை நாட்டியவர் கருணாநிதி.

துப்புரவு பணியாளர்களுக்கு தூய்மை பணியாளர் என பெயர் மாற்றி, கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு முன்னேற வழிகாட்டியவர் கருணாநிதி. அவரது வழியில் தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக்கும் திட்டம், புதுமை பெண், மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம், தமிழ் புதல்வன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றும் ஒவ்வொரு திட்டத்திலும் கருணாநிதி வாழ்ந்து கொண்டிருக்கிறார்,” என்று அவர் பேசினார்.

இந்நிகழ்வில், மாநகர திமுக செயலாளர் உதயசூரியன் தலைமை வகித்தார். மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வனராஜா, மேயர் சங்கீதா முன்னிலை வகித்தனர். சிவகாசி தொகுதி பொறுப்பாளர் செண்பக விநாயகம், ஒன்றிய செயலாளர் விவேகன்ராஜ், பகுதி செயலாளர் காளிராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் பேருந்து கட்டண உயர்வு இல்லை: அமைச்சர் சிவசங்கர் உறுதி

அரியலூர்: ஜூன்.4-

“இரண்டு மூன்று நாட்களாக குறிப்பிட்ட சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் தமிழகத்தில் பேருந்து கட்டண உயர்வு என்ற ஒரு செய்தி பரவலாக வந்து கொண்டிருக்கிறது. இந்த செய்தி தவறானது,” என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூரில் தமிழக போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் நேற்று (ஜூன் 3) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: “இரண்டு மூன்று நாட்களாக குறிப்பிட்ட சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் தமிழகத்தில் பேருந்து கட்டண உயர்வு என்ற ஒரு செய்தி பரவலாக வந்து கொண்டிருக்கிறது. இந்த செய்தி தவறானது. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்களுக்கான பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று நீதிமன்றத்தை நாடி இருக்கிறார்கள்.

அப்படி அந்த நீதிமன்றத்தை அவர்கள் நாடியிருக்கின்ற நேரத்தில், நீதிமன்றம் இது குறித்து மக்களுடைய கருத்தை கேட்டு, ஒரு தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கி இருக்கிறது. அந்த அடிப்படையில், மக்களுடைய கருத்துக் கேட்பு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, தனியார் பேருந்து உரிமையாளர்களின் வழக்கின் அடிப்படையில், அவர்களுடைய



பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று இந்த கோரிக்கையை நீதிமன்றத்துக்கு வந்திருக்கிற காரணத்தினால், நீதிமன்ற நடவடிக்கையினால் தான் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசைப் பொறுத்தவரை, அரசாக இந்தக் கூட்டத்தை நடத்தவில்லை. அரசின் நிலைப்பாடு கடந்த காலங்களில் பலமுறை மீண்டும் மீண்டும் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் மிகத் தெளிவாக சொல்லி இருக்கின்றார். ஏற்கெனவே, சிலமுறை இதுபோன்று பேருந்து கட்டண உயர்வு தகவல் வந்தபோது கூட, ஒரு காலத்திலும் பேருந்து கட்டண உயர்வு இருக்காது. தமிழகத்தில் போக்குவரத்து துறை கடும் நெருக்கடிகள் இருந்தாலும், பொருளாதார சிக்கல்கள் இருந்தாலும், மத்திய அரசு டீசல் விலையை பலமுறை கூட்டி இருந்தாலும், அதனையொட்டி பேருந்து கட்டண உயர்வு இருக்காது என்று அறிவித்திருக்கிறார்.

இன்றைக்கு உலக அளவில் டீசல், பெட்ரோல் விலை குறைந்திருந்தாலும், இந்தியாவை பொறுத்தவரை, மத்திய அரசு டீசல், பெட்ரோல் விலையை குறைக்கவில்லை. இருந்தாலும், அந்த பாதிப்பும் பொதுமக்கள் மீது விழக்கூடாது, அந்த சுமை பொதுமக்கள் மீது சுமை என்று தான் தமிழக முதல்வர், அரசு பேருந்து கட்டணம் உயர்வு இருக்காது என்று ஏற்கெனவே பலமுறை தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கிறார். நாங்களும் தெளிவுபடுத்திருக்கிறோம். மீண்டும் அதே தான் அதைதான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழக அரசு போக்குவரத்து பேருந்து கட்டணத்தை உயர்த்தாது என்று அறிவித்த காரணத்தினால்தான், தனியார் பேருந்து உரிமையாளர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடி இருக்கிறார்கள். அங்கே அவர்களுடைய வழக்கின் அடிப்படையில், மக்களுடைய கருத்தை கேட்கச் சொல்லி, நீதிமன்றம் அந்த அறிவுரையை வழங்கி இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் தான், இந்த கருத்துக் கேட்புக் கூட்டமே தவிர, தமிழக அரசின் நிலைப்பாட்டில் என்றைக்கும் எந்த மாறுபாடும் இருக்காது. அந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தின் கருத்து நீதிமன்றத்துக்கு தான் வழங்கப்படும்.

இங்கே அரசினுடைய கருத்தைக் கேட்கின்றபோது பொதுமக்களுக்கு சுமை இல்லாமல் கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்து தான் வலியுறுத்தப்படும். ஏற்கெனவே, மின் கட்டண உயர்வு இருக்கும் என்ற ஒரு செய்தி வந்தபோதும், கடந்த காலங்களில் இருந்தது என்ற அந்த கருத்து வந்த போதும், மீண்டும் தமிழக முதல்வர், கடந்த 10 நாட்களுக்கு முன்பாக, மின் கட்டண உயர்வு இருக்காது என்பதை தெளிவுபடுத்தச் சொன்னார். அதனை தெளிவுபடுத்தினோம். எனவே, அதே வகையில் தான் பேருந்து கட்டண உயர்வும், நிச்சயமாக அரசு பேருந்து கட்டண உயர்வு இருக்காது,” என்று அவர் கூறியுள்ளார்.

# கீழக்கோட்டையில் உலக மிதிவண்டி நாள் கொண்டாட்டம்

காளையார் கோவில், ஜூன்.04

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் உலக மிதிவண்டி நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி மிதிவண்டி நாள் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 2025ஆம் ஆண்டின் கருப்பொருளான நிலையான எதிர்காலத்திற்கான சைக்கிள் ஓட்டுதல் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் மனநலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதில் மிதிவண்டியின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று குறிப்பிட்டார்.

2018 ஏப்ரலில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஜீன் 3 ஆம் நாளை



பன்னாட்டு நாளாக அறிவித்தது. உலக மிதிவண்டி நாளுக்கான ஐக்கிய நாடுகளின் தீர்மானம் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்த மிதிவண்டிகளின் தனிச்சிறப்பு நீண்டகாலப் பயன்பாடு பல்திறன் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற ஒரு எளிமையான மலிவான நம்பகமான சுத்தமான போக்குவரத்துக் கருவி என்பதை அங்கீகரித்தது.

ஒரு காலத்தில் போக்குவரத்துக்கு முக்கியச் சாதனமாக இருந்த மிதிவண்டி தற்போது பெரும்பாலும் உடற்பயிற்சி சாதனமாக மாறிவிட்டது. சமீபகாலமாக மிதிவண்டி பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் உடல் ஆரோக்கியம். குறைந்த நேரத்தில் மிதிவண்டி ஓட்டுவதன் மூலம் அதிக கலோரிகளை எரிக்க முடியும். உடல் எடையை எளிதாக குறைக்க உதவும்.

பதினேழாம் நூற்றாண்டில் பொழுதுபோக்காக பிரான்ஸைச் சேர்ந்த கோம்டி மீடி டீ ஷிவ்ராக் மிதிவண்டியை கண்டுபிடித்தார்.

பிரான்ஸைச் சேர்ந்த எர்னெஸ்ட் மிசாக்ஸ் தீவிர உழைப்பின் பலனாக 1863ஆம் ஆண்டு கிராங்ஸ் மற்றும் பால் பியரிங்க்ஸ் கொண்டு வடிவமைக்கப்பட்ட மிதி இயக்கி ஒன்றைத் தயாரிப்பதில் வெற்றிகொண்டார். முந்தைய சைக்கிள்களை விட மிசாக்ஸ் கண்டுபிடித்த சைக்கிளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. காரணம் அதனை பயன்படுத்தும் முறை எளிதாக்கப்பட்டது தான்.

உலக மிதிவண்டி நாள் இனம், மதம், பாலினம், வயது, பாலியல் சார்பு, அல்லது வேறு எந்த குணவியலையும் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களாலும் அனுபவிக்கும் உலகளாவிய இயந்திரமாக மீண்டும் மாற்ற வேண்டும் என்றார். ஆசிரியைகள் மீனாட்சி கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஏழு இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் மதுரை மண்டலத்திற்குட்பட்ட 5 மாவட்டங்களைச் சார்ந்த 149 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.9.20 லட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் உட்பட பலர் உள்ளனர்.



# குடியாத்தம் புதிய நீதி கட்சி நகர செயலாளர் ரமேஷ் இல்லத் திருமண விழா

## முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மணமக்களுக்கு வாழ்த்து...

வேலூர், ஜூன்.3-
வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் புதிய நீதி கட்சி நகர செயலாளர் ரமேஷ் இல்லத் திருமண விழா நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும், அதிமுக மாவட்ட செயலாளருமான கே.சி.விரமணி, புதிய நீதி கட்சி குடியாத்தம் நகர செயலாளர் கைத்தறி காவலன் எஸ்.ரமேஷின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



# வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு குறைவு தீர்வு நாள் கூட்டம்

வேலூர், ஜூன்.3-
வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில், நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் மதுசெழியன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணன், வருவாய் கோட்டாட்சியர்கள் செந்தில்குமார் (வேலூர்), செல்வி சுபலட்சுமி (குடியாத்தம்), துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா!!

## தார்வழி திமுகவினர் இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி மாபெரும் கொண்டாட்டம்

வேலூர், ஜுன்.04
வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, இலவம்பாடி ஊராட்சி, தார்வழி திமுக சார்பில், வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் ஆணைக்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா, மக்கள் நலனில் முழு அக்கறை செலுத்தி தொடர்ச்சியாக மக்கள் பிரதிநிதியாகவும், சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவன தொழிலதிபரும், அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் இளைஞரணி துணை அமைப்பாளருமான பொ.மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக, திமுக அணைக்கட்டு ஒன்றிய செயலாளர்கள் மு.பாபு, குமாரபாண்டியன், எல்.ஜ.சி. ஜெய்சங்கர், ஒன்றிய கவுன்சிலர் பிரகாஷ் பகவதி, மக்கள் செல்வன், முன்னாள் கவுன்சிலரும், வள்ளி திருமண மஹால் உரிமையாளர் மற்றும் தொழிலதிபரும், திமுக மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளருமான டி.எம்.குமார் ஆகியோர் கலந்து கொண்டு விழா சிறப்புரையாற்றி இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தார்வழி பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் பத்திரப்பதிவு எழுத்தாளருமான சத்யா மோகன் எம்.ஏ.பி.எட்., கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் திரளான திமுக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், மகளிர் அணியினர், இல்லத்தரசிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# புகையிலை புற்றுநோய் குறைப்பதற்கான மதுரை அப்போலோ கேன்சர் சென்டர்ஸின் புதிய முயற்சி

மதுரை, ஜூன்.4
உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, வாய்புற்று நோயை ஆரம்பகாலத்திலேயே கண்டறிவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புகையிலை பயன்பாட்டின் உடல்நல பாதிப்புகளையும் அதன் தாக்கத்தையும் எடுத்துரைக்கும் பிரச்சாரத்தை அப்போலோ மருத்துவமனை முன்வைக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக 77,000 புதிய வாய் புற்றுநோய் பாதிப்புகளும், 52,000 உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகளவில் வாய் புற்றுநோயினால் பாதிக்கபடுவோரில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் இருக்கிறார்கள்.

குறிப்பாக புகையிலை மற்றும் மது அருந்துபவர்கள் HPV-16 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது வாய்வழி புண்கள் உள்ளவர்கள் இந்த முழுமையான வாய்வழி பரிசோதனையின் மூலம், மருத்துவர்கள் உதடு, நாக்கு தொண்டை வாயின் கீழ் தளம், மென்மையான மற்றும் கடின அண்ணம் கன்னத்தின் உள்பகுதி ஆகிய பகுதியில் உள்ள நாட்பட்ட புண்கள், வெள்ளைப் புள்ளிகள், சிவப்புத் திட்டுகள் அல்லது ஆறாத புண்கள் போன்ற ஆரம்பகால அறிகுறிகளை அவை தீவிரமடைவதற்கு முன்பே கண்டறிய முற்படுகிறார்கள்

அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். டி.கே. சர்ப்பராஜன், டாக்டர் கே. பாலு மகேந்திரா மற்றும் கதிர்வீச்சு புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் ஜி. சதீஷ் சீனிவாசன் ஆகியோர் கூறியதாவது, "புகையிலை பயன்படுத்துபவர்களுக்கு வாய் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து 6 முதல் 7 மடங்கு அதிகம் வழக்கமான ஆரம்பகால கண்டறிதல் மற்றும் வாய் பரிசோதனைகள் மூலம் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து உயிர்களை காப்பாற்ற முடியும்'காது, மூக்கு, தொண்டை தலை மற்றும் கழுத்து மற்றும் எண்டோஸ்கோபிக் ஸ்கல் பேஸ் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். பி. மீனா பிரியதர்ஷினி மற்றும் டாக்டர். ஜி. அருண் பிரபு கணேசன் ஆகியோர் வலியுறுத்தியதாவது, 'கன்னத்தின் உட்புற சவ்வு மற்றும் நாக்கு ஆகியவை இந்த புற்றுநோயினால் பொதுவாக பாதிக்கப்படும் பகுதிகள் ஆகும்.




ஆனால் துரதிர்ஷ்டவசமாக இதன் அறிகுறிகள்பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. எங்களின் இந்த திட்டத்தில் மூலம் சரியான நேரத்தில் சரியான பரிசோதனை மேற்கொண்டு அவர்களை நோயில் இருந்து காக்க முடியும்."

மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் இணை இயக்குநர் டாக்டர். கே. பிரவீன் ராஜன் கூறியதாவது, 'நம் நாட்டில் இருக்கும் மக்களிடையே ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை உருவாக்குவதே எங்கள் நோக்கம். 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், குறிப்பாக புகையிலை பயன்படுத்துபவர்கள், புற்றுநோயைத் தடுப்பதற்கான முதல் படியாக இந்த பரிசோதனை செய்துகொள்ளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்."

மருத்துவமனை தலைமை இயக்க அதிகாரி டாக்டர். நிகில் திவாரி மேலும் கூறியதாவது, 'மதுரையில் உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சையை வழங்குவதில் அப்பல்லோ தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது. இந்தப் புதிய முயற்சி, ஆரம்பகால கண்டறிதல் மற்றும் இத்திட்டத்தின் விழிப்புணர்வு எங்கள் ஒருங்கிணைந்த அணுகுமுறையை பிரதிபலிக்கிறது.

இதன் மூலம் அப்போலோ கேன்சர் சென்டர்ஸ், பொதுமக்கள் வாய் புற்றுநோய் பரிசோதனைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறும், புகையிலை பயன்பாட்டின் ஆபத்துகளைப் புரிந்துகொள்ளுமாறும் வலியுறுத்துகிறது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் அப்போலோ மருத்துவமனைகள், மதுரை மண்டலத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். நிகில் திவாரி, மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர் பிரவீன் ராஜன், புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். சர்ப்பராஜன், டாக்டர். பாலு மகேந்திரா, கதிர்வீச்சு புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் ஜி. சதீஷ் சீனிவாசன் காது மூக்கு தொண்டை மருத்துவ சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் மீனா பிரியதர்ஷினி, அருண் பிரபு கணேசன் மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு பொது மேலாளர் மணிகண்டன். நிர்வாக துணை பொது மேலாளர் லாவண்யா மற்றும் புற்றுநோயியல் ஒருங்கிணைப்பாளர்பிரேம் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ''கருணாநிதி பிறந்தநாளை தமிழ்செம்மொழி நாளாக போற்றிப் புகழ்பாடுவோம்'



சென்னை: ஜூன்.4-
முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102வது பிறந்தநாளுக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை உள்ளிட்ட அனைத்து முற்போக்கு கொள்கைகளாலும் தனது வாழ்நாள் முழுவதும் போராடி, ஆட்சியில் பொறுப்பேற்றிருந்த நாட்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு இன்று 102வது பிறந்தநாள்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி நம்மை விட்டு பிரிந்தாலும், அவர் கொண்ட கொள்கையாலும், சரித்திர சாதனைகளாலும், கலாச்சார நினைவுகளோடும் என்றென்றும் நம்மோடு வாழ்பவர். தமிழ்நாட்டில் அவர் ஆட்சியில் இருந்த போது, எந்தத் திட்டம் செயல்படுத்தினாலும் அதன் நோக்கம் சமூகநீதியாகவே இருக்கும்.

சமூகநீதிச் சிந்தனையையொட்டிய அவருடைய திட்டங்கள் அனைத்தும் வரலாற்று சாதனைகள் ஆகும். சமூகநீதிக்காகவும், சாமான்யர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் அவர் ஆற்றிய அரும்பணிகள் அனைத்தும் தமிழர் உள்ளவரை மறவாமல் காலத்தால் போற்றப்படும், பாராட்டப்படும்.

வாழ்நாள் முழுவதும் தமிழ்மொழி வாழ, தமிழர்கள் வாழ, தமிழ்நாடு வாழ, தமிழ் கலாச்சாரம் வாழ வாழ்ந்த கருணாநிதியின் பிறந்தநாள் விழாவினை தமிழ்செம்மொழி நாளாக போற்றிப் புகழ்பாடுவோம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில்

# தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்

தாம்பரம், ஜுன்.4
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு மேற்கு தாம்பரம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் அவர்கள் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ கலந்து கொண்டு தலைவர் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி வணங்கி 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, செ.சுரேஷ், ரமணி ஆதிமூலம், பகுதி கழக நிர்வாகிகள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், ஆர்.அகஸ்டின், டி.கே. தாமஸ், ஆர்.செல்வகுமார், இரா.ரத்தினகுமார், இரா. விஜயகுமார், கி.மாறன், சீனிவாசகுமார், பேகம், புவனேஸ்வரி, க.முனுசாமி, எஸ்.வி.தனசேகர், தங்கராஜ், சித்திரம்வாசு, எம்.ரவிகுமார், எம்.ரமேஷ், எஸ்.ரமேஷ், பட்டுராஜன், கணபதி, மா.கன்னியப்பன், பி.காளியப்பன், எம்.சூர்யா, எம்.மதன்குமார், இ.நவீன் உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பழனி மகளிர் காவல் நிலையத்தில் காதல் ஜோடி தஞ்சம்

திண்டுக்கல், ஜூன்.4
திண்டுக்கல் மாவட்டம் பழனி மகளிர் காவல் நிலையத்தில் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதியைச் சேர்ந்த சதீஷ் என்பவர் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த பிரியதர்ஷினி என்ற இருவரும் மூன்று ஆண்டுகளாக காதலித்து வந்த நிலையில் இவர்களின் காதலுக்கு பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் சாதி மறுப்பு என்பதால் திருமணத்துக்கு மறுப்பு தெரிவித்த நிலையில் பிரியதர்ஷினியின் உறவினர்கள் மற்றும் உடன்பிறப்புகளால் எதிர்ப்புகள் தெரிவிக்கவே இருவரும் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் பழனி மகளிர் காவல் நிலையத்தில்



இருவரும் தஞ்சம் அடைந்தனர்.

இதனை அறிந்து வருகை தந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் பாவேந்தன் தொகுதி செயலாளர் போர் கொடியேந்தி மற்றும் வழக்கறிஞர் கலைஎழில்வாணன் ஆகியோர் தலைமையில் காவல் நிலைய வளாகத்தில் இருவருக்கும் சாதி மறுப்பு திருமணம் செய்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து பெற்றோர்கள் முன்னிலையில் காதலர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து இருவருக்கும் பெண் வீட்டார் மூலம் எதிர்ப்பு அல்லது மிரட்டல் விட்டால் காவல்துறை மூலம் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் துறை மூலம் எச்சரிக்கை விடப்பட்டு சாதி மறுப்பு திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றன..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161